**2. உணவுபான உதவியாளர் பதவி (வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 10)**

**2.1 சம்பள அளவுத்திட்டம்:-**

2016.11.07ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 28,250-9×300-10×330-3×380- ரூ. 35,390.00 (அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இச்சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் அண்ணளவாக ரூ. 76,400.00) ஆகும்.

**2.2 கல்வித் தகைமைகள்:-**

கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச்சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கில மொழிப் பாடம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகளும் அடங்கலாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**2.3 தொழில் தகைமைகள்:-**

இலங்கைச் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) / தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையில் (NAITA)/இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் (VTA) அல்லது அதற்கு இணையான ஒரு தொழிற் பயிற்சி நிறுவகத்தில் ஒரு வருட காலத்திற்கு குறையாத ஒரு அடிப்படை உணவக/ உணவுபான சேவைப் பாடநெறியைப் பயின்று வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**2.4 அனுபவம்:-**

ஒரு நட்சத்திர ஹோட்டலில்/அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் உணவக சேவை/உணவுபான உதவியாளர் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**2.5 வயதெல்லை:-**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

**2.6 ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்துமூலப் பரீட்சை/செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்

**3. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) பதவி (வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 02)**

**3.1 சம்பள அளவுத்திட்டம்:-**

2016.11.07ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 34,605-9×660-3×755- ரூ. 42,810.00 (அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இச்சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் அண்ணளவாக ரூ. 87,200.00) ஆகும்.

**3.2 கல்வித் தகைமைமைகள்:-**

கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் கணிதப் பிரிவில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தின் கீழ்) அல்லது (புதிய பாடத்திட்டத்தின் கீழ்) மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

சிங்கள மொழிப் பாடத்தில் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் மற்றும் ஆங்கில மொழிப் பாடத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் மற்றும் கணிதப் பாடத்தில் திறமைச்சித்தியும் அடங்கலாக கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**3.3 தொழில் தகைமைகள்:-**

(i) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி
(NDT) (மின்னியல் /இலத்திரனியல் /தொலைத்தொடர்பு)

அல்லது

(ii) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (HNDE)
(மின்னியல் /இலத்திரனியல் /தொலைத்தொடர்பு)

அல்லது

(iii) தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (NDES)
(மின்னியல் /இலத்திரனியல் /தொலைத்தொடர்பு)
அல்லது

(iv) திறந்த பல்கலைக்கழகத் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி
(மின்னியல் /இலத்திரனியல் /தொலைத்தொடர்பு)
அல்லது

(v) மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புத் துறை தொடர்பான 06ஆம் மட்ட NVQ சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*3.4* **அனுபவம்:-**

அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் இலத்திரனியல்/ செவிப்புல/ கட்புல/ தொலைத் தொடர்புகள்/ ஒலிபரப்பு/வளிச்சீராக்கல் மற்றும் குளிர்சாதன அல்லது அதற்கு இணையான ஒரு துறையில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தராக மூன்று வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

செவிப்புல, கட்புல ஒலி/ஒளிபரப்புத் துறையில் பணியாற்றுகின்ற நேரியல் காட்சிப் பதிப்பு, புகைப்படவியல், காட்சி ஒருங்கிணைப்பு, ஒலிபரப்பு முறைமைகள் நிறுவுகை, கட்டமைப்பு (Configuration), பொதுவாகப் பயன்படுத்தப்படும் கட்புல மாதிரிகள் என்பன பற்றிய பரந்த அறிவு அடங்கலாக கணினி மென்பாகம் மற்றும் கணினி வன்பாகம் தொடர்பான திறன்கள் மற்றும் செயன்முறை அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*3.5* **வயதெல்லை:-**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

*3.6* **ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்துமூலப் பரீட்சை/செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்

**4. திறன்வாய்ந்த தொழிலாளர் (மின்னியல்) (வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 01)**

*4.1* **சம்பள அளவுத்திட்டம்:-**

2016.11.07ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520 - 9 × 270 - 10 × 300 - 6 × 330 - ரூ. 32,930.00 (அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இச்சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் அண்ணளவாக ரூ. 71,700/-) ஆகும்.

*4.2* **கல்வித் தகைமைகள்:-**

கல்விப் பொதுத் தராதர (சா./த.) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(**கவனிக்க**: மின்னியல் பிரிவில் 03ஆம் மட்ட NVQ சான்றிதழைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் கல்விப் பொதுத் தராதரப் (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல.)

*4.3* **தொழில் தகைமைகள்:-**

இலங்கைதொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) /தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை (NAITA) அல்லது அரசாங்கம் அங்கீகரித்த நிறுவனம் வழங்கும் மின்னியல்/ இலத்திரனியல்/ கருவி திருத்த வேலைகளில் 03 ஆம் மட்ட NVQ சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*4.4* **அனுபவம்:-**

அரசாங்க /அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் மின்னியல்/ இலத்திரனியல்/ கருவி திருத்த வேலைகளில் மூன்று வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*4.5* **வயதெல்லை:-**

*விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).*

*4.6* **ஆட்சேர்ப்பு முறை:-**

*எழுத்துமூலப் பரீட்சை/ செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.*

5. **கணினி இயக்குநர் பதவி (வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை - 02)**

*5.1* **சம்பள அளவுத்திட்டம்:-**

*2016.11.07ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 32,330 - 3 × 380 - 10 × 445 - 4 ×660 - ரூபா 40,560.00 (அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இச்சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் அண்ணளவாக ரூபா 83,300.00) ஆகும்.*

*5.2* **கல்வித் தகைமைமைகள்:-**

*கல்விப் பொதுத் தராதர (உ./த.) பரீட்சையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தின் கீழ்) அல்லது (புதிய பாடத்திட்டத்தின் கீழ்) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்:*

*அத்துடன்*

*சிங்கள மொழிப் பாடத்தில் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் மற்றும் கணித பாடத்தில் மற்றும் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச்சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதர (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*5.3* **தொழில் தகைமைகள்:-**

*இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் (VTA)/ தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் (NAITA) அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் 06 மாதத்திற்கு குறையாத கால கணினிப் பிரயோகம் தொடர்பான ஒரு பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*அல்லது*

இலங்கை Computer Driving License சான்றிதழை அல்லது சர்வதேச Computer Driving License சான்றிதழை பெற்றிருத்தல்.

*5.4* **அனுபவம்:-**

*அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கணினி இயக்குநராக / கணினிப் பிரயோகங்கள் உதவியாளராக உரிய துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவை காலத்தைப் பெற்றிருத்தல்.*

*மூன்று மொழிகளிலும் பணியாற்றக்கூடிய ஆற்றல் மேலதிக தகைமையாக கருதப்படும்.*

*5.5* **வயதெல்லை:-**

*விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவேஅரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்ப தாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).*

